




ஓலை 191| ஓசை 314| செப்டம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் குயிலன்

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்

பொருள்

செய்ய முடியாத செயலையும் செய்து முடிக்க வல்லவரே பெரியவராவார்; அதனைச் செய்ய இயலாதவர் சிறியவராவார்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

எங்குமினி தமிழே வெல்லும்!

பாவகை : அறுசீர் மண்டிலம்

விண்ணெங்கும் நிறைந்த மேகம்;
விண்மீன்கள்; நீல வண்ணம்;
மண்முழுதும் நிறையும் மாரி;
மாவியற்கை நிறைந்த வையம்;
வையத்தின் வெளிச்ச வெள்ளம்;
வெண்ணிலவு, பரிதிப் பாய்ச்சும்
என்றிவைகள் போல்நி லைத்தே
எங்குமினி தமிழே வெல்லும்!

பெரியாரின் கைத்த டிக்கே
பெரும்மூடம் ஓடி னாற்போல்,
பரிபோன்று கழுதை யானப்
பிறமொழிகள் பிதற்றி னாலும்,
உரியதொரு அரணாய் நின்று
உமியாக ஓட வைத்து,
எரிநெருப்பாய் எரித்துக் கொன்று,
எங்குமினி தமிழே வெல்லும்!

எங்குமினி தமிழே வெல்லும்;
இடரெனினும் நிமிர்ந்தே நிற்கும்;
பொங்குகடல் போலப் பொங்கும்;
பாரினிலே முதன்மைப் போன்று
இங்கென்றும் இறுதி யாக
இருக்கின்ற மொழிவி தாகும்;
மங்காத மொழித்த மிழ்தான்
மண்ணிலென்றும் ஒளிர்ந்தே வாழும்!





நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பூமியின் இறுதி மூச்சு

பாவகை : கட்டளைக் கலித்துறை.

கனிம வளத்தைக்
களிப்பாய்ச் சுரண்டக்
கதிகலங்கும்.
பனியும் உருகிடப்
பாறை உருளப்
படரழிவாம்
இனியும் தொடர்ந்தால்
இடுக்கண் நிறைந்தே
இடர்படுமே
கனிவுடன் பூமியில்
கன்றினை நட்டிதைக்
காக்கலாமே.



கவிஞர் செ. கலைவாணி

க.ஒன்னார் ஒறுத்த உதிர்ந்த தளிர்கள்
தாகம் தணித்த மழை.

உ.ஒருவழிச் சார்பு ஒருமுகப் பற்று
ஒவ்வா அரசு கெடும்.

ங.இன்மை அறுத்து கசடு ஒறுத்து
இனிமை தழைக்கும் இல்.

ச.ஆசு அகற்றி உயர்வு விளைக்கும்
ஆன்றோன் அருளும் மொழி.

ரு.அல்லவை அறுத்து அறிவுத் தளைக்க
இல்லாமை நீங்கும் நிலம்.



இந்தக் கட்சி
இல்லையென்றால்
அந்தக் கட்சி.

அந்தக் கட்சி
நீக்கி விட்டால்
வேறு கட்சி.

வேறு கட்சி
திருப்தி இல்லாமல்
போனால்
இன்னொரு
புதியகட்சி.



பணமும் பதவியும்
சொகுசு வாழ்வும்
நிரந்தரமாய் வேண்டும்.

வேடம் கட்டிய பின்
நடித்தாக வேண்டிய
கட்டாயம்.

மேடை இல்லையென்றால்
வீதியாவது வேண்டும்.
கல்லா நிறைய வேண்டுமே!

தன்மானம்
சுயகௌரவமென்று
எதுவுமில்லை எனக்கு.

இவ்வளவுதான்
நான்.
எப்போதுமே
நிரந்தர அரசியல்வாதி.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

நொடிக்கு நொடி துரத்தல் நாடுகளின் போர்
வெற்றியைத் தீர்மானிக்கும் பந்து!
பந்தின் வேகத்தை மிஞ்சுகிறது பார்வையாளர் துடிப்பு
பறந்திடும் கால்களைப் பார்க்கையில்.

உலகத்தைச் சுழல விடுகிறது உதைபந்தின் ஓட்டம்
திடுக்கிடும் கடிகாரச் சுழற்சி!
திடலெங்கும் வார்த்தைப் போர்
ஒற்றை நுழைவில் அடக்குகிறது
கால்கள் தீண்டிய பந்து.

ஆரவாரப் பசி அடங்கக்
காற்றில் மிதக்கின்றன
பந்தின் பயணக் கனிகள்.



வலைக்குள் விழுகிறது வெற்றியின் தருணம்
பெருமூச்சு விடும் பந்து.
விழும் உதைக்கு மேல் உதை நகர மறுக்கிறது
வலையை விட்டகலா விழிகள்.

விழிகளை உருட்டும் பந்து
திடலெங்கும் வலையைப் பார்த்து
விழ வைத்து அழ வைக்கிறது!

அடி வாங்கியும் அழ வைக்கிறது
வலை நோக்கிய ஓட்டம்
நீங்காத கால்களுக்குள் பயணப்பந்து.

உருளும் பந்தின் பின்னே
வாலாட்டும் நாயெனவே
ஓடித் திரிகிறது உறங்கா மனம்.

கோடி விழிகளின் குவியல்
ஓடி ஓடிக் களைக்கிறது
வலைக்குள் வெல்லும் பந்து.

உதைகளைத் திருப்புங்கள்
திடலுக்கு வெளியே
தீர்க்கலாம் பந்தாடும் போர்களை.
கால்களின் கனவுகள் கவனத்தில் விழும்
உதைகள் கோப்பையைத் தேடும் பந்து.

பயபக்தியில் பந்தய மனிதர்கள்
தொடங்கி வைக்கும் தேடலை
பறக்கும் பந்தின் பயணம்.

வாழ்வா சாவா
வலை தீர்மானிக்கிறது
கால்களின் ஓட்டத்தை.

ஒற்றைக் கோப்பை ஒரு நொடி ஏந்த
ஓயாத ஓட்டத்தில் உதைபந்து.

வலை விரிக்கும் வலை
விழுந்த பந்தில் விரிகிறது
விழியெங்கும் பரவச அலை!

பந்தாட்டப் பந்தயம்
நின்று விளையாடுகிறது
சூதாட்டப் பந்து.

கவிஞர் இளையவன் சிவா

என்னை மட்டும் காத்திடு இறைவா வென்று
என்னால் உன்னிடம் வேண்டிட என்றுமே இயலாது;
உன்னை நம்பி வாழ்வோரை என்றுமெப்போதும்
உன்னால் கைவிட எப்படித்தான் முடிகிறது?

வெந்த சோற்றைத் தின்று விதிமுடிந்தால்
வெந்துபோகத் தயாராய் இருப்போர் பலருண்டு;
வந்தவினை சேர்த்தவினை அழிந்துபட்டுப் போகுமென நம்பி
சொந்தம் விட்டு, மாநிலம் விட்டு, தேசம் விட்டுப் பரவசமுடனே
பந்தம் நீயெனக் கைலைநாதனே உன்னைத் தொழவந்தோரை
வந்த வெள்ளம் அடித்துச் சென்றதென்ன நீதி?



முதலைவாயில் சிக்கிமாண்ட சிறுவனைப் பலவாண்டின்பின்
மீட்டுக்கொண்டு வந்த ஆலால சுந்தரரே,
பாம்பொன்று தீண்ட வீழ்கின்றபோதும் தந்தையிட்ட
புனிதப்பணியாம் வாழையிலை கொணர்ந்த நாவுக்கரசைப்
பரமசிவனிடம் சண்டையிட்டு மீட்ட திருநாவுக்கரசரே,
பொற்குடத்தில் சாம்பலாய்ச் சுருங்கிப்போன பூம்பாவையை
நற்குல மங்கையாய் நலமுடன் மீண்டெழச் செய்த
நற்றமிழ் ஞானசம்பந்தரே நீவிரப்படி செய்திட அருள்வானேன்?
நமசிவாயப் பெருமானென நாங்களெல்லாம் சேக்கிழார் வழியில்
நாளெல்லாம் எம்நாதழ் அழுக்கச் சொல்வதெல்லாம் வெறும்பொய்யா?

அருளாளர்களே, தேவாரம் பாடியருளிய குருமார்களே,
பரமசிவமுமக் கருளியது மெய்யெனில் உம்மிடம்
அரனின் திருப்பெயரா லிப்போது ஒன்று
அடியவன் வேண்டுகிறேன்; கைலையாத்திரை சென்றார் யாரும்
அமரராகியிருந்தாலுமன்னவர் யாவருமுயிருடன்
அவரவர் இல்லம் வந்துசேர்ந்திடும் வண்ணம் அருளிட வேண்டும்!

கர்மவினைதான் வெல்லுமென்றால் கடவுளால் ஆவதென்ன?
காலமெல்லாம் கடவுளை வணங்கினாலும்கர்ம பலனிடம்
காலங்காலமாய் இறையடியார் தோற்பாரெனில் கடவுளிந்தக்
கருமம்மிகு புவியில் இல்லாமலே போகட்டுமே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

நான் வரும்போது
பெரும் வாதையின் முடிவில்
வெறுங்கையோடு வந்து சேர்ந்தவன் என்பதை
மிக நன்கு அறிவேன்!

வாழ்விற்கும் வறுமைக்கும் நடுவில்
என்மேல் நடந்தன
தார்க்குச்சித் தழும்புகளாய்
உறவுகளின் விளையாட்டு!



ஆனாலும்
அடுக்கடுக்காய் நடந்த
வாழ்வின் பரமபத விளையாட்டில்
ஊனமாகிப் போனது
எனது தாயக்கட்டை!

வாய்மையின் வழக்காறுகள் அத்தனையும்
பொய்மையின் நிழலில் ஊர்ந்த
பச்சோந்தி மனிதர்கள் நடத்திய
பாசம் என்னும் பகல்வேச நாடகத்தில்
நானே விரும்பிப் போட்டுக் கொண்டது
கோமாளி வேஷம்!

வாக்குகள் பொய்க்காதென
முன்பின் நகர்ந்தே
தொடங்கும் முன் முடிந்துபோன
சிறுகதையின் முதல் வரி நான்!

பிரதியாய் வந்த
மருந்தொன்றை எடுத்து
மறதியாய் பூசியதில்
மறுபடியும் நடக்கிறது
எழுத்துப் பிழையாய் எந்தன் வாழ்க்கை!

ஆனாலும்
ஒளிமிகும் வாழ்க்கை
எங்கோ ஊர் மூலையில்
எனக்காக இருப்பதாகத்
தொலைவில் சிரிக்கும் விடிவெள்ளி சொல்கிறது!

கவிஞர் யாழிசை செல்வா, தேனி மாவட்டம்



தேடலில் நீ
தொலைதூரம் போகாதே
என் நினைவுகளில் நித்தமும்
வந்திடு!

ஏனெனில்
உன்னை எண்ணி வாழும் நாட்கள்
இனியும் இருக்குமோ?
தேடுகிறேன்
நீ என்னோடு இருக்கிறாய் என்றாய்!

ஆனால்
சில சந்தர்ப்பங்களில்
நான் தோற்றுப் போனது போல் உள்ளேனே!

எதுவரைக்கும் நேசனே
என்னோடு உன் விளையாட்டு?
உன் நினைவில் நான் உடைந்ததும்
நூலாகிப் போனதே என் தேகமும்

விரைவில் பதிலைத் தந்திடு!
விரைகிறது காலமும்
இனியும் முடியாது விரைவாய் விரைந்திடு
தனிமையில் உனைத் தேடி
காத்திருக்க!
என் தேடலே நீயாகி விட்டாய்!

கவிஞர் திருமதி. ஜனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

நேற்று வரை நீ கட்டிய கனவு மாளிகை,
இன்று ஒரு வெற்று அறையாகிறது.
அவன் வரும்போது விளக்கெல்லாம் அணைந்துபோகும்,
மிஞ்சுவது உன் மூச்சின் கடைசி நிழல் மட்டுமே.

கேட்க மாட்டான் உன் கதையை.
பார்க்க மாட்டான் நீ சேர்த்த சொத்தை.
உன் பெயரைக்கூட அவன் உச்சரிக்க மாட்டான்,
ஏனென்றால் பெயர் எல்லாம்
இந்த மண்ணுக்கு மட்டும்தானே.



நீ சிரித்து அழுத நாட்கள்,
காதலித்து காயப்பட்ட இரவுகள்,
"நாளைக்குப் பார்க்கலாம்" என்று
தள்ளிப்போட்ட அணைப்புகள்,
எல்லாம் ஒரு மணல் கடிகாரத்தின்
கடைசித் துகளில் கரைந்துபோகும்.

அவன் கடவுளின் தபால்காரன்.
வந்து கடிதத்தைக் கொடுத்துவிட்டு
திரும்பிப் பார்க்காமல் போய்விடுவான்.
நாம்தான் அந்தக் கடிதத்தைப்
பிரிக்கும் வரை வாழ்கிறோம்,
பிரித்த பிறகு வெறும் ஞாபகமாகிறோம்.

எல்லாம் இருந்தும் ஒன்றுமில்லை,
ஒன்றுமில்லாமல் எல்லாம் இருக்கிறது.
இதுதான் அவன் சொல்லாமல் சொல்லும் தத்துவம்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி, இலங்கை

காத்திருப்பு



ஏங்கிய தருணங்கள் எல்லாம்
ஏக்கத்தின் தடங்களாயின
காத்திருந்த காலங்கள் எல்லாம்
கண்ணீரின் பக்கங்களாயின

தேடிய பாதைகள்
திசைமாறிப் போயின
நாடிய வார்த்தைகள்
நாவிலேயே நின்றுபோயின

வருவாய் என்ற நம்பிக்கையில்
வாசல்கள் பல பார்த்தேன்
வருவாயா என்ற கேள்வியோடு
வழிகள் பல கடந்தேன்

பார்த்த விழிகள் வாடின
பேசிய இதழ்கள் மூடின
சொல்லாத சொற்கள் சுமையாகின
சுமந்த நெஞ்சம் சிதைவாகின

நாள்கள் நகர்ந்தன
நினைவுகள் நின்றன
காலங்கள் கடந்தன
கனவுகள் கரைந்தன

ஒருநாள் வருவாய் என்ற
ஒற்றை நம்பிக்கையை மட்டும்
உள்ளத்தின் ஓரத்தில்
உயிராக வைத்திருந்தேன்

ஆனால்,
நீ வராத ஒவ்வொரு நாளும்
என் காத்திருப்பை நீட்டித்தது
நீ பேசாத ஒவ்வொரு மௌனமும்
என் ஏக்கத்தை ஆழப்படுத்தியது

காத்திருந்தவன் நான்
காலம் என்னை மாற்றவில்லை;
காத்திருப்பே என்னைச்
கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியது

இன்று புரிகிறது
சில காத்திருப்புகள்
வருகைக்காக அல்ல
வராத ஒருவரின் நினைவோடு
வாழப் பழகுவதற்காக

காத்த கண்கள் காய்ந்தாலும்,
காத்த நெஞ்சம் களைத்தாலும்,
காத்திருப்பு மட்டும்
கடைசிவரை கைவிடவில்லை.

கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)

அருகே வாரா அழகியிவள்
பருகும் அமுதம் பாலொளியாம்
பெருகும் இன்பம் பேரின்பம்
தருவாள் ஒளியின் தண்மையிலே
உருவம் ஒன்றே உலகோர்க்கு
வருடும் தாயாய் வாழ்கிறதே
வருவாள் மறைவாள் வான்வெளியில்
ஒருநாள் முழுதாய் ஒளிர்வாளே!



கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

இன்றைய விடியலின்
முகங்கள் இரைச்சலின்
முகவரியில் வேதனையின்
வெளிச்சப் புள்ளிகளாய்!

அன்றைய அமைதியான
விடியற்காலை இன்று
சத்தங்களின் குரலில்
தொலையும் சங்கடங்களாய்!

நாகரிகத்தின் தொட்டிலில்
மனிதம் மந்தைகளாய்
பலருக்கும் விடியலின்
வெளிச்சம் தூரமாய்!

இருட்டில் வாழ்க்கைத்
தொடங்கி இருளில்
மூழ்கும் இளமையின்
நாட்கள் வேதனைகளாய்!

விடியலின் புன்னகை
முகங்கள் பார்க்காத
பலரின் விடியல்கள்
இங்கே விடியாத
பொழுதுகளாய்!



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

விழி மூடித் தூங்கும் வேளையிலே - என்
விழித்திரை மீதொரு நாடகமே!
வண்ணங்கள் தூவும் உலகமதில் - நான்
எண்ணிய யாவும் நடந்திடுமே!

சிறகுகள் இல்லா வானம்பாடி - நான்
சிகரங்கள் தொட்டிடப் பறந்திடுவேன்!
கடந்து போன கால மனிதர்களை - மீண்டும்
கைகுலுக்கி அங்கே மகிழ்ந்திடுவேன்!

மகிழ்ச்சியும் பயமும் கலந்திருக்கும்
மர்மங்கள் நிறைந்த கதையிருக்கும்!

விடிந்ததும் கரையும் பனித்துளி போல் - அது
விழித்ததும் நினைவில் மறைந்திருக்கும்!
தூக்கத்தின் மடியில் பூக்கும் மலர் - இது
தோன்றி மறையும் மாயக் கனவு!

துயரங்கள் யாவையும் மறந்துவிட்டு - நான்
தூக்கத்தின் மடியில் சாய்ந்திருந்தேன்,
இழந்த என் விண்மீன் மீண்டுவந்து - என்
இருண்ட வானில் ஒளிர்ந்ததுவே!

வார்த்தைகள் பேசிடத் தேவையின்றி - இரு
விழிகளும் கதைகள் பேசி மகிழ்ந்ததுவே,
பிரிந்தவர் மீண்டும் இணைந்தது போல் - என்
இதயமும் நிம்மதி கொண்டதுவே!

இன்பத்தின் எல்லை தொட்டேனோ - என
எண்ணி நான் புன்னகைக்கும் வேளையிலே,
அதிகாலைப் பறவையின் சத்தத்தினால் - என்
அழகிய கனவும் கலைந்ததுவே!

விழி திறந்து பார்த்த அந்த நொடியில் - என்
அறையினில் தனிமை மட்டுமே எஞ்சியது,
கனவினில் கிடைத்த அந்த நொடிச் சுகம் - என்
நிஜத்தின் வலியைப் பெருக்கியது.



கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

ஆதவன் தந்த செல்வமே கர்ணரே!
சுயமரியாதைச் சுடராய் வாழ்ந்து காட்டியவரே!
பெற்றவள் ஆற்றில் விட்ட போதிலுமே
பெருமதிப்பால் அகிலம் வென்ற வேந்தனே!
வில்லேந்தினால் நடுக்கம் தரும் வீரரே!
நட்புக்கு இலக்கணமாய் ஈகைக்கு எல்லையானவரே!
சூழ்நிலையால் சோதிக்கப்பட்ட சோர்வற்ற தீரரே!
தர்மம் காக்கத் தலைகுனியாதவரே!
உயிர் போனாலும் வாக்கு மாறாதவரே!
உண்மையின் உன்னத உயர்ந்த சின்னமே!
போர்க்களத்தில் சீறும் சிங்கமாய் நின்றவரே!
விதியின் சதியால் நாண் ஓய்ந்தாலுமே
மூவுலகமும் உள்ளவரை அழியாத மகாபடைப்பே!



கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்

திண்ணையோடு
போனது மனிதம்!
அன்று வீட்டு வாசலில்
திண்ணை இருந்தது,
அங்குதான் அன்பின்
முகவரி எழுதப்பட்டது.

வழிப்போக்கனுக்கும் இளைப்பாற
இடம் கொடுத்தது,
வந்த விருந்தினரை
இன்முகத்தோடு வரவேற்றது.

பெரியவர்கள் அமர்ந்து
வாழ்வை விதைத்தார்கள்,
பேரப் பிள்ளைகளுக்குப்
பண்பாட்டை நட்டார்கள்.

மாலைக் காற்றோடு
கதைகளும் பேசியது,
மனித நேயம் அந்தத்
திண்ணையில் பூத்தது.

அக்கம் பக்கமெல்லாம்
அன்று ஒரே குடும்பம்,
திண்ணையே அன்றைய
உறவுகளின் அடையாளம்.

இன்றோ திண்ணையோடு சேர்ந்து
உறவுகளும் போயின,
உள்ளங்கள் யாவும்
சுயநலச் சிறைக்குள் ஆயின.



உயர்ந்த மதில்கள் இன்று
வானைத் தொடுகின்றன,
ஆனால் மனித இதயங்கள்
ஒன்றை ஒன்று மறுக்கின்றன.

பூட்டுகள் பெருகின;
புன்னகைகள் குறைந்தன,
சுவர்கள் உயர்ந்தன;
சொந்தங்கள் சுருங்கின.

பக்கத்து வீட்டில்
யார் வாழ்கிறார்கள் என்பதைக்கூட,
பலருக்குப் பல நாட்கள்
தெரியாமல் போகிறது.

திண்ணையை நாம் இழந்தது
வெறும் கல்லையும் மண்ணையும்
அல்ல அல்ல,
இதயங்களை இணைத்த
உன்னதப் பண்பாட்டை!

கவிஞர் நிஸ்ரினா மதீனா, மாத்தளை

நமக்கான வாழ்க்கை எங்கே?
தேடித் தேடிப் பார்க்கின்றோம்,
ஓடி ஓடி உழைக்கின்றோம்.

விருப்பம் இருக்கிறதா தெரியாது.
திருப்பத்தைத் தேடியே திரிகின்றோம்.
ஆசைகளை அடுக்கிக் கொண்டே
காசைத் தேடி அலைகின்றோம்.



அடுத்தவருக்காக வாழ்ந்தே நாம்,
படுத்து உறங்க மறக்கின்றோம்.
கோரிக்கை வைத்தே கடவுளிடம்
கொடுக்கச் சொல்லிக் கேட்கின்றோம்.

இருப்பதினிலே மகிழ்ச்சி காணாமல்
பொருளை நிறைப்பதினிலே நிறைகின்றோம்.
தவணை முறையில் வாங்கியே
தலைநிமிர்ந்தே நடக்கின்றோம்.

அடகு வைக்கும் நகைகளிலே
முடங்கிக் கிடக்கிறது மகிழ்ச்சிகளும்.
தேவையற்றதைத் தேடியே நாம்
தெளிவில்லாமல் வாழ்கின்றோம்.

காத்திருப்பு

ஆடிமாதம்தான் வருவார்
குடுகுடுப்பைக்காரர்.
வலசைப்பறவை போல
வந்து செல்வார்.

அவரின் ராகமான
பாட்டைக் கேட்டு மகிழும்
சிறுவர் கூட்டம்
பறந்துவந்து மொய்த்துவிடும்.

ஒட்டுப் போட்ட சட்டையும்
கையிடுக்கில் குடையும்
முட்டிவரை கட்டியுள்ள
காவி வேட்டியும்தான் அவர்.

சூரியன் வந்து எட்டிப்பார்க்குமுன்
ஒருமுறை தெருமுழுதும் வருவார்.
ஒவ்வொரு வீட்டுக்கும்
ஜக்கம்மா குறி சொல்கிறாள்
என்று சொல்லிப் போவார்.

சிறிதுநேரம் கழித்துவந்து
ஒவ்வோர் இல்லத்திற்கும்
விளக்கவுரை ஆற்றுவார்.

தானியமோ சில்லரையோ
கொடுத்தாலும் அவர் வேண்டுவது
சட்டை புடவைகள்தாம்.



தன் பேத்தி கல்யாணம்
எப்பொழுது நடக்குமென
அவர் வந்து சொல்வதற்குக்
காத்திருக்கிறாள்.
கடைசி வீட்டில் ஒரு கிழவி.

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்



பாரதி
எரிமலையின் எழுதுகோல்.
கவிதை நெருப்பின் உலைக்களம்.
வார்த்தைகளில் நீ கர்ணன்
வசதியில் நீ குசேலன்.

சீட்டுக் கவிதைகள் எழுதி
சில்லறைகள் சேர்த்தவன் அல்ல.
பாட்டுக் கவிதைகள் எழுதி
பாரை உயர்த்தியவன்.
உன் கவிதையின்
பாடுபொருள் எல்லாம்
சுதந்திரத்தின் தேடு பொருளாய் இருந்தன.
நெருப்பை விழுங்கி
எரிமலையை கொப்பளித்தவன்.

வானவில்லை கையில் வைத்து கொண்டு
வண்ணங்களைத் தேடுகிறோம்.
பந்தயக்குதிரைகளை வைத்துகொண்டு வேகம் பற்றி
ஆமையிடம் கருத்து கேட்கிறோம்.
சூரியனை கண்ணில் வைத்துக் கொண்டு
வெளிச்சத்திற்காக தீக்குச்சிகளிடம் கையேந்துகிறோம்.
அது போல உன் கவிதைகளை வைத்துக் கொண்டே
சுதந்திரம் வேண்டி பிறரிடம்
கருத்துக் கேட்கிறோம்.

(செப்டம்பர் 11 பாரதி நினைவு தினம்)

அன்பால் என்னை அரவணைத்த
தாயுமானவர் என் தந்தை

என்னவருக்கு தோள் கொடுத்து
நானிருக்கிறேன் என்று
நம்பிக்கை கொடுத்தவர்
என் தந்தை

அழகாய் என்னை பார்த்த உம் விழிகள்
நான் அமங்களமாய் இருக்க போகிறேன் என்று
ஞானதிருஷ்டியில் உணர்ந்தீர்களாப்பா.

என் மகள் படும் வேதனைகளை
கண் கொண்டு காண இயலாது;
இறைவா எனை அழைத்து கொள் என்று
உரைத்தீர்களோ.



ஐந்து வருடங்கள் அப்பா உங்களை
இழந்து நாங்கள் தவிப்பது.
கால சக்கரம் சுழலும் வேகம் கண்டு
கதிகலங்கி போகிறேன்.

கண்ணுக்கு கண்ணாக வளர்த்த
நீங்களும் இல்லை.
கண் போல பார்த்து கொண்ட
கணவனும் இல்லை.

ஏனிந்த வாழ்க்கை என்று
மனது கலங்கி கண்ணீர் விட்டு
சிந்தை சீர்குலைந்து போனது.

அப்போது கேட்ட
அம்மா ஆஆஆஆஆ என்ற ஐந்து குரல்
செவியில் விழுந்து சிந்தையை
சீர்படுத்தியதால் மறுபடியும்
வாழ்க்கை போகும் போக்கில் என் வாழ்வு.

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

நீங்காத நினைவிடம்



அன்புள்ள அன்னையே.
அருகாமை அகன்றாய்
நீங்காத நினைவிடம் கொண்டாய்.
பிரியாத பாசம் தந்தாய்.

தேடாத தேடலில்லை,
ஓயாத ஓட்டமில்லை.
இங்கே— நீ எங்குமில்லை.

கடலில் மூழ்கிப்போன உடலைப்போல
நீயும் தொலைந்து போனாய்.

தொலைதூரத்திலே வேலைப்பளுவென
ஓய்வெடுத்தாயோ உலகத்திலிருந்தே?
சிலிர்த்துப்போகும் என் மனதிலே
குளித்து நீள்வது நினைவு மட்டுமே.

உன் மடியில் உறங்கி, தோள்சாய்ந்து,
விட்டந்தியாய் பதிலுரைத்துப் போக ஆசை.
பசைபோல உன்னை ஒட்டிக்கொள்ள,
இசைபோல நீ ஒலித்துக்கொண்டிருக்கிறாய்
தினமொரு நிலையிலே.

ஏக்கம் தந்துபோகும் நீயும் நிழலென நீங்காமலே
நிலைகொண்டு தொடர்வாய் மன்னித்துவிடுவாயா.
புள்ளியிடாத ஏதோவொரு இடத்தில் உன்னை
நான் நோவினை செய்திருந்தால்

நெருடல் தந்துபோகும் அன்பின் ஆதுர்யமான
ஏகாந்த எண்ணங்களுக்குள்ளே
இன்னும் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

பின்வாங்கல்களை கிடைசாத்தி,
மெல்ல மெல்ல உன்னோடு ஓர் உறக்கம் மீண்டும்.
மழலையாகி உன் மடியில் உறங்கிட வேண்டும்.

உனக்கென்று எழுதும் இந்தக் கடிதமும்
உன்னைச் சென்றடையாது என்பதை அறிந்திருந்தும்
இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

நீங்காத நினைவிடத்தில்
நீ மட்டும் நீங்காமல் இருப்பதால்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)



வெளிச்சம் இல்லாத
விசித்திர உலகம்
அங்கே இருளே
நிரந்தர ஆட்சி

பூமியின் பார்வைக்கு
எட்டாத தூரம்
மறைந்து வாழும்
மர்ம தேசம்

விண்ணின் ரகசியங்களை
ஒளித்து வைத்தாய்
யாரும் தொடாத
அமைதிப் பள்ளத்தாக்கு
கதிரவன் ஒளியும்
தயங்கிடும் பகுதி
கற்பனைக்கு எட்டாத
விண்கல் பள்ளங்கள்

காலத்தின் சுவடுகள்
அழியாமல் இருக்கும்
காற்றே இல்லாத
தனிமைப் பிரதேசம்
விஞ்ஞானம் தேடும்
விடைபெறா விடுகதை
விண்வெளி வீரரின்
தீராத தாகம்

மண்ணின் மனிதர்கள்
பார்க்காத அழகு
மௌன கீதம்

இசைக்கும் நிலவே
பகல் இரவு
அறியா விந்தையுலகு
பயணங்கள் தொடரும்
உன்னை நோக்கி

இரவின் ரகசியப்
பக்கங்கள் நீயோ
இதயம் கவரும்
விண்வெளி விந்தை
பூமிக்குக் காட்டாத
புன்னகை என்ன
புதிர்கள் நிறைந்த
புதுமை உலகம்

மறுபக்கம் என்பது
தனியொரு கலை
மறைமுகப் பாதை
காட்டும் ஒளியே
தேடல் இன்னும்
முடிந்து விடவில்லை
தெரிந்து கொள்ளவே
துடிக்கிறது உலகம்

கவிஞர் கோ. கே. ஏழுமலை, நத்தாமூர், உளுந்தூர்பேட்டை

நான் தினமும் உன்னிடம்
உரையாடுவதில்லை.
ஆனால் உன்னை நினைக்காத
நொடியே இல்லை.
உன் அன்பிற்கு எல்லை இல்லை.
என் பாசப்பிணைப்புக்கு
உருவம் இல்லை.
எப்போதும் உன்னையே
தொந்தரவு செய்வேன்.
ஒருபோதும் யாவரிடமும்
விட்டுக் கொடுக்க மாட்டேன்.
என் மூச்சு காற்று இருக்கும் வரை
உன்னை விட்டு விலக மாட்டேன்.
பாசம் என்னும் வலையில்
மாட்டிக்கொண்டேன்.
மறுக்க வழியில்லாமல்.



விடியலாய் தோன்றிய உன் நினைவை
வரமாய் கையாளுகிறேன்.
மாறாத உந்தன் அன்பிற்கு
கட்டுப்பட்டவள் நானே!

கவிஞர் மா. மோனிஷா

கோடைக்காலம் சுட்டெரிக்க
வயல்களெல்லாம்
வறண்டுபோய்க்கிடக்க
மரங்களெல்லாம் பட்டுப்போய்க்கிடக்க
உழவுத்தொழிலோ உறங்கிக்கிடக்க
உழைப்பவன் தினம்
அழுது புலம்புகிறான்.



நீலவானமே நித்தமிதைப்
பார்த்துக்கொண்டுதானே
இருக்கிறாய்.
கொஞ்சம் கூடவா
உனக்குள்
இரக்கம் வரவில்லை?

கருணை நிறைந்த
மேகத்தாயே
உன் கொடைமகளான
கோடைமழையைப்
படைவீரர்களுடன் அனுப்பிவை.

எங்கள்
பஞ்சம் தீர்ந்ததும்
தேங்கிய நீர்த்துளிகளை
ஆவியாக்கி
காற்றுடன் சேர்த்துக்
கண்ணியமாகத் திருப்பி
அனுப்பி வைக்கிறோம்!

கவிஞர் பாக்யபாரதி, தருமபுரி

கொள்ளாமல் கொள்கிறது
கொல்லாமல் கொல்கிறது

நில்லாமல் நீள்கிறது
நிலையாமல் அலைகிறது

மெல்லமாய் அணைக்கிறது
செல்லமாய் அழைக்கிறது

கள்ளமாய் இருக்கிறது
கல்லெனவே கனக்கிறது

சொல்லாமல் சொல்கிறது
செல்லாமல் சிதைக்கிறது



நினைவுகளை அழிக்க வேண்டுமெனில்,
நீ அழிந்துதான் போக வேண்டும்!

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)



விடாப்பிடியான சொற்களுக்குள்
புதைக்கப்பட்டு

விவாதமில்லா வாழ்க்கையை
தொடர்ந்து

சப்தமில்லா அறைக்குள்
தன் அவலத்தை சிதற விட்டு

தலையணைக்குள் சிக்கிக் கொண்ட
கண்ணீரை மறைத்துக் கொண்டு

இதழோரம் வருடி விட்ட புன்னகையொன்றை
மனம் விரும்பாமல் அளித்துக் கொண்டு

உறவுகள் இருந்தும்
உணர்வுகள் இல்லா மனங்களை நேசித்து

எல்லாம் இருந்தும்
எதுவும் இல்லாத இந்த வாழ்க்கையை
என்னவென்று சொல்வது?

அவளும் ஓர் அநாதை தானே.

கவிஞர் முஹம்மட் றாபி ஷேபா கானம், பாலமுனை (இலங்கை)

இதழ்களின் சுழிப்பில்
இதயமும் விரிகிறது
இருவிழிகளின் பார்வையில்
இனிமையது கூடியது

இசைமீட்டலில் உள்ளமும்
இதமாய் ஆனது
இனியவளின் அன்பிலே
இன்பமும் இனிதானது

இறகு முளைக்கிறது
இன்னிசை பிறக்கிறது
இளமையும் இணக்கமாகி
இணைந்தது உன்னுடன்

இளகியது மனம்
இயற்பெயர்தனை மறந்தது
இருப்பிடமும் எதுவென
இப்போது தெரியாமல் போனது

இங்கெனைத் தேடிவந்து
இளைப்பாறிடு அன்பே
இவ்வுலகில் உன்னைவிட
இனியேதும் வேண்டுவதில்லை

கனிவானேன் கண்ணே
காந்தப் பார்வையிலே
கதிரவன் எழும் முன்னே
கண்விழிக்கிறேன் கண்ணே



கரும்பின் சுவையாய்
கன்னத்தில் இட்ட முத்தம் இனிக்கிறதே
கவிதை படைக்கிறேன்
கானமிசைத்துச் செல்கிறாய்

கமலமாய் மலர்ந்து
கருத்தினில் நிறைகிறாய்
கம்பளி தேவையில்லை
கணப்பை நீ தருகிறாய்
களிப்பாகும் காதல் ஓவியமே
கண்புகழ் இலக்கியத்தின் நாயகியே

கடிகாரத்தின் ஓசையாய்
நொடிக்கொரு முறை
நெஞ்சத்தில் துடிப்பானாய்
காதலின் பாடமே
கலந்திட்டேன் பாவையிடமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

அச்சமின்றி
நடக்க எத்தனித்தாலும்
மிச்சமின்றிப் பதிகின்றதே
காலத்தின் எச்சம்.

நகரத்துடிக்கும் பாதங்களுக்குப்
பின்னால் பிடிவாதமாய் ஒட்டிக் கொள்ளும்
காலச்சுவடுகள்.

நழுவிய வாய்ப்புகளைக்
கூட கடந்து விடலாம்
துரோகத்தின் வடுக்களை
எப்படி மறப்பது?

வாய்ப்புகளின் இழப்பு ஏமாற்றம்தான்
ஆனால் நேசித்த நெஞ்சின் துரோகமோ
ஆறாத வடுவல்லவா?

அச்சாணியாய்
பதிந்த நினைவுகளிலிருந்து
எப்படி மீள்வது?

அதிகமாய் வேலை செய்யும்போது
வலியெல்லாம் மறைந்திடும் என்பதை
கேள்விப்பட்டு செயற்பட்டால்.

வேலைத் திரைக்குப் பின்
ஒளிந்து கொள்ளும் இதயம்
கொஞ்சம் ஓய்வெடுக்கத் தலைசாய்த்தால் போதும்
புயலாய் வந்து தாக்குதே.
அந்தத் துயரத்தின் வடுக்கள்.



அனைத்துப் புதிர்க்கும் நான் பதில் சொல்கின்றேன்
மானிடத்தில் வலிகளைக் கூறுவதை விட்டு
காகிதத்தில் கூறிப் பீய்த்து எறிந்து பார்.

ஒரு நிம்மதி பிறக்கும்.
மனிதம் அறியாத என் மனதை
மௌனமாய்த் தாங்கிக் கொள்கின்றது
என் முதல் காதலான இந்த வெள்ளைக் காகிதம்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி (இலங்கை)

இது போதும்

உப்பேறிப் போன
நாரத்தங்காய் சுருளும்
புளிப்பேறிப் போன பழைய சோறும்
வளை ஏறிய கைகள்
காய்ப்பேறிப் போன
கையில் இடும்போது,
இனிப்பேறி போகுமே நாவிலே
பசியேறிப் போன மதியத்தில்
இது போதும்! இது போதும்!
இனி எப்போதும்
என்னுதே; என்மனம்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்



உண்மை நட்பு என்றுமே
உயிருக்கும் மேலான
தோள் கொடுக்கும் சொந்தம்தான்
துணை நிற்கும் உறவுதான்.

உறவு என்ற கூட்டுக்குள்ளே
ஒரு நாளும் அடங்காது
உயிரோடும் உணர்வோடும் கலந்திட்ட
உறவுதான் நட்பு என்னும் பாசம்தான்.

செல்வமும் செல்வாக்கும் மனிதர்களை உயர்த்திடும்
உயர் நிலையை சமூகத்திற்கு
எடுத்துக்காட்டும் கண்ணாடிதான்.

ஏற்ற இறக்கம் வாழ்வின் எல்லோருக்கும் உண்டுதான்
இருப்பவர், இல்லாதவர் தரம் பிரிக்கும்
குணம் மட்டும் நட்புக்கு இல்லையே.

உள்ளத் தூய்மையும் உணர்வான உயிர்மையும்
எந்நாளும் காத்திடுமே, "நட்பு என்னும் உயிர் உறவு".

எதிர்பார்ப்பு ஏமாற்றம் எதுவும் இல்லை நட்புக்கு
உண்மை அன்பு ஒன்றையே
உயர்வாய்ப் போற்றும் நட்புதான்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

வாழ்க்கையே பள்ளி அறை
கற்பது காலம் முழுவதும்
கடப்பதும் தினம் புதுவிதம்
சுவாசமே உயிர் மூச்சு!
இருந்தாலே தினம் பேச்சு
பசிக்கின்ற காலம் வரும்
தின்ற பின்னே செரித்துவிடும்
ஆடுகின்ற கூட்டம் வந்தால்
மனதுக்கு மகிழ்ச்சி வரும்!
தேடுகின்ற செல்வம் எல்லாம்
செல்லாமல் தனித்து விடும்
தனித்து செல்லும் காலம் வர
உறவுகளும் கூடி அழும்!
சாம்பலாகும் போகும் முன்பு
சாதனைகள் வெளியே தெரியும்
பிள்ளைகளுக்கு வேண்டியதை
பெற்றவர்கள் வாங்கி வைத்தால்
என்ன வைத்துச் சென்றாரென்று
எகத்தாளப் பேச்சும் வரும்!
நோய் வந்து தொல்லை தர
தெரிந்துவிடும் பிள்ளை குணம்
மனிதப் பிறவி வேண்டாம் என்று
மனநிலையே மாற்றம் தரும்!



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன்

ஒரு நொடி முடிவில் உலகமும் வெறுமையே
நெருக்கடி மறந்து நிம்மதி காணுமே
சற்றுமுன் யோசித்தால் சகலமும் தூசியாய்
வெற்றிடம் நிரப்பிடும் வெகுளியான மூச்சே

வாழ்க்கைத் தோல்வியில் வாதிடும் பொருண்மையில்
சற்றென முடிவில் சகலமும் முடியுமே
விட்டிடும் வார்த்தையை விருந்தாய்க் கூட்டிடும்
கட்டிடும் மனமாய்க் கருத்தினில் உயர்த்துமே

ஏட்டினில் வலமாய் எழுப்பியச் சொல்லும்
பாட்டாய் ஒளிரும் பண்பின் சிறப்பாய்
நித்தம் துயரம் நிம்மதியைக் குறைத்து
சுத்தமாய் வாழ்வைச் சுதந்திரமாய்க் கெடுக்குதே

பிள்ளைகள் நலனை பிறவியாய் நினைக்காமல்
வெள்ளமாய் விரைந்து வெகுளித் தற்கொலையே
தன்னிலை மறந்து தற்செயல் முடிவாய்
செய்வது தெரியாமல் செயற்கையான முடிவே

வெல்வேன் என்றே வெற்றியாய்ப் பிறக்கும்
சொல்லின் பொருளறியா சொற்பமாய் மடியலாமா
தோல்விகள் வந்தினும் தோற்காத உள்ளமாய்
வெல்வது ஒன்றே வெற்றியின் படிக்கல்லே

சமத்துவ வாழ்விலேச் சங்கடமும் விரைவாய்
சிமிழாய் விரைந்திடும் சிங்கார வனமாய்
விட்டுக் கொடுத்து வாழ்தல் நன்மையே
கட்டுக்கடங்காத் தன்மை களங்கமும் தருமே

பிழைக்க ஆயிரம் பிறிதொரு வழியிருக்க
உழைக்கத் தெரியாமல் உழலுமே மனதும்
சறுக்கும் போதெல்லாம் சஞ்சலம் கொள்ளாமல்
உருகும் நெய்யாய் உரிமையில் நிறைவாயே



மறுவாழ்வுக் கிடைக்கையில் மகத்துவ பலனாய்
வெறுமையின் தன்மையில் வெற்றிகள் நீடிக்குமே
கடந்த வாழ்வுக் கலக்கத்தின் முடிவாய்
திடமாய் மலர்ந்திடும் திரட்சியின் வரமாய்

நித்தம் வாழ்வில் நிம்மதிக் குறைக்கும்
சுத்தமிலா மனதைச் சுதந்திரம் ஆக்குவோமே
அடுத்த நொடியும் அற்புதமாய்க் காக்கும்
எடுத்த செயலிலும் எழுப்பிடும் கோயிலாகவே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

அப்பா எனும் வார்த்தை,
அம்மாவின் அன்பும் கூட
அப்பாவின் அன்பிற்குப் பின்னேதான்!
அப்பாதான் குழந்தையைக் கையில் பிடித்து
முதல் முதலாகத் தூக்கும்போது
ஏதோ இனம் புரியாத மகிழ்ச்சி!



அப்பா எனும் வார்த்தை
வலிமையின் அடையாளம்!
வெயிலில் உழைத்து
நமக்கு நிழல் தந்தவர்!
குழந்தையின் கண்களில்
கண்ணீரைப் பார்த்தால்
உலகத்தையே எதிர்ப்பார் அப்பா!

அப்பா என்பவர் வெறும் அப்பா மட்டுமல்ல,
நல்ல நண்பன், கதாநாயகன்
எல்லாம் சேர்ந்த ஒரே உறவு!

அப்பா என்பவர் அமைதியான புயல்!
வெளியில் கடுமை,
உள்ளே கடலலையை விடவும்
உயர்ந்த பாசம்!
அதை அளவிடவே முடியாது!

அதுவும் பெண் குழந்தையிடம்
ஏன் தெரியுமா இந்த அளவற்ற பாசம்?

பெண் குழந்தைகள் எல்லாம்
ஒரு தெய்வப் பொக்கிஷம்!
அந்தப் பொக்கிஷத்தைத்
தன் கண்ணிமை போலக் காப்பவர் அப்பா!

தன் உறவுகளுக்காக
அவர் கனவுகள் எல்லாம்
மண்ணோடு மண்ணாய் போனது.

பத்து மாதங்கள் என்னைச் சுமந்தவள்
தாய் என்றால், தாயையும் என்னையும்
தன் நெஞ்சில் சுமப்பவர்
அப்பா!

கவிஞர் ஜைதா நிஹ்மத்துல்லஹ், கண்டி (இலங்கை)

முள்ளோடும் மலரோடும்
அவள் முகம் கண்டேன்
அதன் சொல்லோடும் அழகோடும்
அவள் அகம் கொண்டேன்

கவிபாடும் எழில்தேகம்
அவள் இன்பம் திறந்தேன்
ஓடும் நதியாக ஒசை விளையாட
ஒரு ததும்பல் ஆனேன்

பேசும் மலர்பாதம் அவள்
செய்யுள் மொழிநடை கண்டேன்
ஏக்கம் தனிக்கின்ற சுவை
கண் பெற்ற கொடை என்றேன்

குறுநகையாகப் படைத்தானோ
இவளை கம்பன் அறிந்தேன்
இதழ் வலிகள் இல்லாத வழி
இன்பம் தருபவளென உணர்ந்தேன்



ரதியோ அவள்
பேரின்பம் தானோ
மலர்செடியோ கொடியாள்
மயில் கூந்தல் மேகமோ

கூர்விழிகள் வண்டின் ரோஜாவாம்
தேர்பாவை அவளோ
எனக்குள் சுவர்க்கமானாள்
கனியே இனியவளே

நான் பார்த்த நதிகள் எங்கே?
நான் சுவைத்த அறுசுவை அங்கே!
தேனாக சுரக்கும் போர்கூடம்
அதில் அவளை வென்றேன்

அலையின் ஓசை அவள்தானே
எனக்குள் மோத
உன் அழகைக் கண்டேன்
என் ஊரே எழிலே என்பேன்

கவிஞர் நஸ்ரினா, குருனாகல் (இலங்கை)

சின்னச் சின்ன சண்டைகள் ஆயிரம் வந்தாலும்
உன்னை விட்டுப் பிரிய என் மனம் ஒப்பவில்லையே!
எனக்குத் துன்பம் நேர்ந்த நேரமெல்லாம்
என் தோள் சாய அருகில் நின்றவள் நீயே!

தாயிற்கு பிறகு எனக்குக் கிடைத்த
தாயின் மறு பாச உயிர் நீ
என் வாழ்வின் ஈடற்ற பொக்கிஷமும் நீயே.



சில நேரம் தாயிடம்
திட்டு வாங்கித் தந்த
குறும்புக்காரியும் நீயே!

ஆனால், எந்த இடத்திலும் என்னை
யாரிடமும் விட்டுக் கொடுக்காமல்
பேசும் என் அரணும் நீயே!

என் மௌனத்தின் மொழியைப்
புரிந்தவள் நீயே.

சில நேரம் தாயின்
கோபக் கணையிலிருந்து என்னை
அரணாக நின்று
காப்பாற்றியவளும் நீயே!

அள்ள அள்ளக் குறையாத
பாசத்தைத் தந்தாய்!
நான் சிரிக்கும் நொடியில்
உன் உலகமே மகிழும்,
நான் கலங்கும் நொடியில்
உன் இதயமே துடிக்கும்!

என்னை உன் சொந்தக் குழந்தையாய்
அரவணைத்து,
வாழ்க்கையின் சரியான பாதையைக் காட்டிய
என் வழிகாட்டி நீயே!

கவிஞர் ரிஷ்மா ரம்ஸான், கண்டி (இலங்கை)

அவள் முன்பு இருந்த
பெண் இனி இல்லை,
தன் முன்னைய உருவத்திற்கே
அவள் அந்நியமாகிவிட்டாள்,
ஏனெனில் இறுதியில்
அவள் தன்னையே தேர்ந்தெடுத்தாள்.



தனக்காகவே மாறினாள்,
தன் மதிப்பை உணர்ந்தாள்,
தன் அமைதியைப் பாதுகாத்தாள்.

நேற்றைய அவள் மறைந்தாலும்,
இன்றைய அவள் வலிமையாக நிற்கிறாள்
தன்னைத் தேர்ந்தெடுத்தவள்,
தன் பாதையை உருவாக்கியவள்.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

கடலோடு போராடத் தெரிந்தவன்
ஆழ்கடலின் நடுவிலும்
அஞ்சாமல் நீந்தத் துணிபவன்.

மழையோடு நனைவான்
புயலோடு வலை வீசுவான்
உப்புக் காற்றிலும்
சுவாசிப்பான்.



வெயிலோ குளிரோ
எதிலும் நின்று
ஓயாது உழைப்பவன்.

இடர்கள் தாங்கி நின்று
குடும்பம் காக்கும்
நங்கூரம் அவன்.

அவனே
கடல் அன்னையின்
தலைமகன்.

மீனவன்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

எமக்கு நிழல் தந்து,
சுவாசிக்கக் காற்றுத் தந்து,
உண்ணப் பழம் தந்து,
அடுப்புக்கு விறகு தந்து,
உறங்கக் கட்டிலாகி,
குழந்தைக்கு ஊஞ்சலாகி,
தன்னை அர்ப்பணித்து,
எதையும் திருப்பிக் கேட்காத
ஒரே நண்பன் மரம்தான்.



அந்த மரத்தை வளர்க்க
பல வருடமாகும்.
ஆனால் அதை வெட்ட
ஒரு நிமிடம்கூட அதிகம்.

"என்னை வெட்டாதே" என்று
மரம் சொல்லாது.
"என்னை நடு" என்று
மரம் கெஞ்சாது.

வெட்டினால் துளிர்விடும்,
நட்டினால் பலன் தரும்.
இதுதான் மரம்.

மரத்தை நட்டு இயற்கையைக்
காப்போம்.

எழுந்திரு என் நண்பா
விழுந்தது போதும், எழுந்திரு
உன்னைத் துன்பப் புயல் தாக்கியதால்
துவண்டாயா? அவமானம் சுட்டதால் அழுதாயா?
கல்வித் தோல்வியால் கவலை கொண்டாயா?
காதல் வேள்வித் தீயால் தவித்தாயா?
அடுத்த நொடி நிச்சயமில்லை
அந்த நொடி அற்புதம் நிகழலாம்



காலம் ஓடுமுன் நீ ஓடு
வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயம்
தவழ்ந்தால் வெற்றி கிடைக்காது
அறுந்த வலையை மீண்டும் கட்டுகிறது சிலந்தி
கலைந்த கூட்டைச் சீராக்குது குருவி
யார் தடுத்தாலும் சர்ரென்று பாயும் அருவி

பாதை தடுத்தால் வேறு பாதையில்
சுறுசுறுப்பில் விரைந்து செல்லும் எறும்பு
ஐந்தறிவு உயிர்களின் செயல் திறமை
முயற்சி ஆறறிவுக்கு இல்லையா?
கண்மூடிக் கண்திறக்கும் முன்னே
நேரம் விரைந்து ஓடுது, கண்ணே

தாமதியாதே, தள்ளாடாதே
அடுத்த நொடி அற்புதம் கிடைக்க
அழைக்குது உன்னை, அசராதே
அடுத்தடுத்த பெருந் தோல்வியால்
போதையின் பாதையில் நீயும் போகாதே
கல்லறைத் தேடும் தற்கொலை முயலாதே

தூரத்து விண்மீன்களை உறுதி ஏணியால்
உயரே பிடிக்கலாம், வானில் ஊஞ்சல் ஆடலாம்
வா, ஆகாயமும் நிலமும் உன்வசம்
ஆகும் காலம் வெகு விரைவில்
அடுத்த நொடி அற்புதங்கள் நிகழலாம்

கவிஞர் ரெஜினாபானு,மேலூர்

கதைகளையும்
கதை சொல்லிகளையும்
தொலைத்த
இன்றைய
வீடுகளின்
இரவு
வரவேற்பறைக்கு
வருவதேயில்லை
பாட்டியும்
காக்கையும்



எங்கிருந்தோ வந்த
மேகங்கள்
என் வீட்டு முற்றத்திலும்
விளையாடிப் போனது.

சிறு நதியின் போக்கில்
ஓடும் நீரில் மனம்
கரைந்து போனது.

காத்திருந்தோம் நாங்கள்
என்று புல்லினங்கள்
புன்னகைத்து மின்னியது.

ஆதவனின் அதீத தீண்டலில்
தவித்து அன்னை மடி
நனைந்து நழுவிக் குளிர்ந்தது.



ஜன்னல் அளவில் அந்த வானம்
ஆழ்ந்த நீலத்தில் அழைத்து
மயக்கும் மாயத்தில்.

விரல் நீட்டித் தொடும் ஆவல்
அதிகம்தான்.
மனம் விழைகிறது மனம் கொய்த
அக்காட்சிதனைத் தொட்டுவிட.

இடைஞ்சலாக சாளரத்தின்
தடைக்கம்பிகள் கன்னம் உரசி
தடையிட்டதில்

ஆவல் அடைப்பட்டு அகம்
சிறைப்பட்டு
கண்களில் விழுந்தது கலைந்த
மேகங்களின் கவிதை.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டினம்

பிறரின் துயரத்தினைத் தனதாக்கிப்
பார்ப்பதே சமூக சேவை.
பசியின் கண்ணீரைத் துடைக்கும்
அன்பின் அழகிய வெளிப்பாடு அது.

நமக்காய் வாழ்வது சுயநலம்.
பிறருக்காய் வாழ்வதே பேருயர்வு.
இருளில் தவிப்போருக்கு
விளக்காய் ஒளிர்வது சிறப்பு.

ஏழையின் வீடு தேடிச் சென்று அன்பையும்
கருணையையும் அள்ளிக் கொடுப்போம்.
தனிமையில் வாழும் நெஞ்சங்களுக்கு
துணையாய் நின்றிடல் வரம்.

கல்வியற்ற பிள்ளைகளுக்குக் கல்வியையும்,
ஆதரவற்ற பிள்ளைகளுக்கு
அன்பையும் அள்ளியிறைப்போம்.

தனிமையில் வாடும் நெஞ்சங்களுக்கு
துணையாய் நின்றிட வேண்டும்.
வறுமையுற்ற பிள்ளைகளுக்குக்
கல்வியின் வாசலைத் திறப்போம்.
நம்பிக்கை இழந்த உள்ளங்களுக்கு
நம்பிக்கை ஊட்டிட முனைவோம்.

இன, மதம் பாராமல்
இணைந்து கரம் கொடுப்போம்.
வேற்றுமைகள் மறந்து
விழுந்தவனைத் தூக்கி நிறுத்திடுவோம்.



சிறு உதவி செய்தாலும்
அதன் மதிப்பு பெரிதாகும்.
ஒரு புன்னகை வாங்கினாலும்
ஒரு வாழ்க்கை மலர்ந்திடும்.

சேவை செய்யும் கரங்களில்,
சமூகத்தின் எதிர்காலம் உண்டு.
அன்பும் மனிதநேயமும் மலர்ந்தால்
அழகான உலகம் பிறந்திடும்.

கவிஞர் றணிஷா அஸ்ஹர், பெரியநீலாவணை (இலங்கை)

இயற்கையின் அழகு
குழந்தையின் மழலை
பெற்றவரின் பாசம்
காதல் கணவனோடு
ஆயுளுக்கும் தொடரும் பந்தம்!
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்க
மனித மனம் பார்ப்பதையெல்லாம்
கைக்கொள்ள வேண்டிட
பொருள் மீது ஆசை!
இதயத்தில் வீற்றிருக்க
எத்தனையோ ஆசைகள்
நிறைவேறாத துன்பங்கள்!
இறைவனை எந்நாளும்
இதயத்தில் சிறை வைக்க!
இம்மையிலும் மறுமையிலும்
கிடைத்திடுமே பேரின்பம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

ஓயாது பேசியவன்
ஊமையாய் அலைகிறான்
தேயாத மதி என்னில்
தேய்பிறை சேர்க்கிறான்
காவியக் காதலன்
கணவனாய்
பொறுப்பேற்றான்
என்ன செய்ய
இப்போது
காதலிக்கத்தான் நேரமில்லை
கைப்பேசியே
உன் உலகமாயிற்று
தனிமையே
என் வழக்கமாயிற்று
ஊடகம் பார்த்துச்
சிரிக்கிறாய்
உன்னவள்
உரையாடல் தவிர்க்கிறாய்
வார்த்தைகூட வேண்டாம்
விழிமொழி பேசு
அதையே வழிமொழிகிறேன்



கவிஞர் ந. அமிர்தலட்சுமி, பழனி

மாம்பழத்துக் கன்னமோ
தேன்சுவைக் கிண்ணமோ



தாம்பூலம் போடவா
தாவணிப் பூவே
மாம்பழத்துக் கன்னமோ
தேன்சுவைக் கிண்ணமோ

கள்ளூறும் போதையை
கண்டதுமே ஏத்துறியே
தள்ளாடுது மனசு
தடம்மாறுதடி வயசு

கும்மாளம் போடத்தான்
சோடி சேரலாமே
தெம்மாங்கு இசையோட
சேதியொன்னு சொல்லட்டுமா

பொத்திவச்ச ஆசையெல்லாம்
பொண்டாட்டியா வாடி உனக்கு
முத்திப்போன காதலால
முழுநிலவாத் தெரியுமடி

ஒனக்காக நாயிருக்க
ஓராயிரம் வேணாமடி
எனக்கான வரமாத்தான்
என்னவளா இருவேண்டி

ஊருல ராணியா
ஊர்வலமாக் கொண்டாரேன்
வேருல ஊண்டிய மரமா
வாழ்க்கைய நாதாரேனே

கவிஞர் தமிழ்நதி கிருஷ்அபி



கடந்த காலங்களின் நிகழ்வுகள் நினைவுகளாய்
இடம் பிடித்திருக்கின்றன எந்தன் மனத்துள்ளே!
மறந்துவிட முயன்றாலும் இயலாமற் போக
மனத்தின் வாசலில் அணிவகுத்து நிற்கின்றன!
சிரித்து மகிழ்ந்த தருணங்கள் சிலவும்
சிந்தனையில் தோன்றி மகிழ்வித்து மறையும்!
இனிமையாய்ப் பேசிய உறவுகளும் நட்பும்
இன்னும் நெஞ்சினில் நிறைந்து நிற்கின்றன!
பிரிந்தவர்களின் மௌனங்கள் மட்டும் பேசாமல்
விரிகின்றன மனத்திரையில் ஊமைப் படம்போல!
இருவிழி ஓரங்களில் இறங்கும் கண்ணீர்
கரைந்த காலங்களின் கதைகளை உரைக்கும்!
அன்றாடம் புதுவிடியல் தோன்றிடும் போதும்
மனம் மட்டும் பின்னோக்கிப் பயணித்திருக்கிறதே!
காலத்தின் பழைய காலடித் தடங்கள்,
சலசலப்புகள் பின்னாளில் எதிரொலித் திருக்கும்!
மறந்துவிட நினைத்தாலும் மறுபடியும் வந்தணைக்கும்!
மறதியும் ஒரு மருந்தென்று உரைத்திடுவர்!
இருந்தாலும் சிலகாயங்கள் ஆறுவதில்லை! தொடரும்
நினைவுகள் சுமையல்ல! கடந்தகாலத்தின் வாசம்
என்றெண்ணித் தொடர்வோமே வாழ்க்கைப் பயணத்தை!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

இருந்தாலும்...

படைப்பு முடித்தபின்
தன் திருப்தி
நம்பிக்கை கொடுத்தாலும்

நமக்கானவர்களின் பாராட்டும்
ஆக்கபூர்வ விமர்சனங்கள்
சந்தோஷம் கொடுத்தாலும்

நிறைய
சமூக ஊடகங்களில்
பார்ப்பதும் விரும்புவதும்
பகிர்வதுமான நிகழ்வுகளிலும்

அச்சு ஊடகங்களில்
பிரசுரமாவதிலும்
படைப்பு முழுமை பெறுகிறது

அடுத்த கட்ட நகர்வுக்கு
உந்துதல் கிடைக்கிறது

****

இதை இதைத்தான்...

சொல்லோ செயலோ
எதிர்மனிதர்
எதிர்பார்த்தபடியே நடக்க
அவர் சொல்லும்



'இதை இதைத்தான்
எதிர்பார்த்தேன்'
என்று சொல்லும்
கணத்தில்

அவரின் பாராட்டும்
நம்மின் புரிதலுக்குமான
உவகையும் சேர்ந்து
மனம் போடும் ஆட்டத்தை
விவரிக்க வார்த்தைகளால்
இயலாது.

சிறுகதை



கன்னியாகுமரி மாவட்டத்தின் ஓர் மலை அடிவாரத்தில், வேளிசேரி எனப்படும் கிராமம் அமைந்திருந்தது. கானல் வெந்து, உணர்வுகளைக் கரைசலாக்கும் அந்த இயற்கைச் சூழல், அதே நேரத்தில் ஒரு மர்மத்தைப் போக்கும் நிழலையும் தாங்கியிருந்தது.

ஹரிஷ், பள்ளிப் பருவத்திலிருந்தே புதையல் தேடும் ஆர்வம் கொண்டவன். அவனது தந்தை தியாகராஜன், ஊரக அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். தாய் சரஸ்வதி, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஹரிஷின் கனவு, உலகின் சிறந்த தடய அறிவியல் ஆய்வாளராக வேண்டும் என்பதே. திருநெல்வேலியில் உள்ள கல்லூரியில் குற்றவியல் ஆய்வியல் படிப்பில் சேர்ந்த ஹரிஷுக்கு, ஏழு நண்பர்களுடன் அமலா என்ற மாணவியும் நெருங்கிய தோழியாக அறிமுகமானாள். ஹரிஷின் தனித்துவமான சிந்தனையும், ஆழமான யோசனையும் அமலாவை வெகுவாக ஈர்த்தன. ஆனால், ஹரிஷ் தொழில்நுட்ப நுணுக்கப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டியதால், காதலுக்கு வழிகாட்டும் எண்ணமே அவனுக்கு வரவில்லை.

ஒரு நாள் அமலா வழக்கம்போல வகுப்பிற்கு வந்தாள். ஆனால், ஹரிஷைக் காணவில்லை. வகுப்பறையும் வெறிச்சோடிக் கிடந்தது. அடுத்த நாளும் ஹரிஷ் வரவில்லை.

இதற்கிடையில், கிராமத்தில் பரபரப்பான சம்பவம் ஒன்று நடந்தது. போலீசார் விசாரணை மேற்கொண்டிருந்த பழைய தொட்டியில் ஓர் உடல் கண்டெடுக்கப்பட்டது. அந்த உடலை முதலில் கண்டுபிடித்தது ஹரிஷ்தான்.

திரு ம. ஹரிஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

ஊருக்குள் செய்தி காட்டுத்தீபோல் பரவியது.
"ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்" என்ற செய்தி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேஷ், தனது நண்பர் தாகவேவுடன் இணைந்து ஹரிஷிடம் சந்தேகத்தின் பேரில் விசாரணையைத் தொடங்கினார்.

"நீ தடய அறிவியல் ஆய்வகத்தில் பயிற்சி மாணவன். இந்த இரண்டு உயிரிழப்புகளையும் முதலில் நீயே கண்டுபிடித்திருக்கிறாய். இதற்குப் பின்னால் ஏதாவது காரணம் இருக்கிறதா?" என்று கணேஷ் கேட்டார்.

ஹரிஷ் அமைதியாக இருந்தான். ஆனால், மரணங்கள் தொடர்ந்தன.

மூன்றாவது உடல் ஊரின் மேற்குப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்டது. ஒவ்வொரு விசாரணையிலும் ஹரிஷ் அங்கு இருந்தான். இதனால், ஒரே நபரின் ஆய்வுக் களமாக அந்தக் கிராமம் மாறிவிட்டதுபோல் தோன்றியது. காவல்துறையினரின் சந்தேகமும் ஹரிஷின் மீது அதிகரித்தது. இறுதியில், ஹரிஷைக் கைது செய்து தீவிரமாக விசாரித்தனர்.

"இந்தக் கொலைகளுக்கும் உனக்கும் என்ன தொடர்பு?" என்று அதிகாரிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஹரிஷ் மிகவும் அமைதியாகப் பதிலளித்தான்:

"நான் கொலைகாரன் அல்ல. நான் கண்டுபிடிப்பவன். சதியைத் தீர்ப்பவன்தான்."

ஆய்வுக் குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்தினர். DNA பரிசோதனை மற்றும் கத்தியில் இருந்த தடயங்கள் மூலம் உண்மையைத் தேடினர். இறுதியில், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனையிலிருந்து தப்பிச் சென்று இந்தக் கொலைகளைச் செய்திருப்பது தெரியவந்தது.

திரு ம. ஹரிஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

ஹரிஷ் குற்றமற்றவன் என்பது நிரூபிக்கப்பட்டது. அவன் விடுவிக்கப்பட்டான். அம்மா, அப்பா, அமலா என அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். ஹரிஷின் வாழ்க்கையும் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. ஆனால், அவன் மனத்தில் மட்டும் ஒரு மர்மம் தொடர்ந்து கொண்டிருந்தது.

"நான் யார்?" இந்தக் கேள்வி எப்போது அவன் மனதில் எழுந்தாலும், அவன் திடுக்கிட்டு அமைதியாகிவிடுவான்.

ஒரு நாள் இரவு அமலா அவனைத் தொலைபேசியில் அழைத்தாள்.
"நீ இவ்வளவு ஆழமாகச் சிந்திப்பது ஏன்? உன்னுடைய ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் ஒரு மர்மம் இருப்பதுபோல் தோன்றுகிறது" என்றாள். ஹரிஷ் மெதுவாகப் புன்னகைத்தான்.

"நான் மர்மத்தின் நிழல்" என்றான்.

"ஏன்?" என்று அமலா கேட்டாள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த ஹரிஷ் பின்னர் பேசத் தொடங்கினான்.

"முதல் இரண்டு உடல்களும் உண்மையில் வேறு நபர்களுக்குச் சொந்தமானவை. அவை என் நண்பன் தினேஷின் அடையாளத் தகவல்களுடன் தொடர்புடையவை. தினேஷ் மூன்று வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டான். அவனுடைய அடையாளங்களைப் பயன்படுத்தி, நான் ஒரு நிழலைப் போல வாழ்வதைத் தேர்ந்தெடுத்தேன்."

அமலாவின் கண்கள் விரிந்தன.

"அப்படியானால்... நீ யார்?" என்று அவள் கேட்டாள்.

திரு ம. ஹரிஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

ஹரிஷ் மெதுவாகச் சொன்னான்:

"நான் தினேஷ் அல்ல. ஆனால், அவனது நினைவுகளிலும், அவனது நிழலிலும் நான் இருக்கிறேன். அவன் மறைவிலே நான் வாழ்கிறேன்."

அமலாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அந்தக் கண்ணீரோடு கலந்த புன்னகையுடன் அவள் தனது காதலை மெதுவாக வெளிப்படுத்தினாள்.

"உன் மர்மத்தில்கூட என் வாழ்க்கை இருக்கிறது."

மலைகளின் அகலத்தில் பரவி, எப்போதும் மறைவின் நிழலாகக் காத்திருக்கும் ஹரிஷ், உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வரத் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தான்.

ஆனால், அவன் யார்?

அந்தக் கேள்விக்கான விடையை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மலையின் மறைவில் ஒளிந்திருந்த அந்த மர்மம் மட்டும் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தது.



திரு ம. ஹரிஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

கட்டுரை

பிறப்பு, கல்வி, தனி வாழ்க்கை:



கு. ராமலிங்கம் என்னும் இயற்பெயரை உடைய குயிலன், செப்டம்பர் 14, 1922 அன்று, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பனைக்குடியில், குருமூர்த்திப் பிள்ளை -வெயிலுகந்தம்மாள் இணையருக்குப் பிறந்தார். ஆறாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். குடும்பச் சூழலால் ரங்கூனுக்குச் சென்று பணியாற்றினார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றார். குயிலன் இதழாளராகவும் எழுத்தாளராகவும் செயல்பட்டார். மணமானவர். மனைவி சீதாலக்ஷ்மி.

குயிலன் நூல்கள்

இலக்கிய வாழ்க்கை

குயிலனின் 'காக்கையும் மனிதனும்' எனும் முதல் கவிதை, அவரது பதினைந்தாவது வயதில், வ.ரா. ஆசிரியராக இருந்த 'பாரத தேவி' இதழில் வெளியானது. தொடர்ந்து 'சுதேசமித்திரன்', 'திருமகள்', 'இந்திரா', 'மாலதி', 'ஹிந்துஸ்தான்', 'கல்வி', 'ஜனசக்தி', 'தொழிலாளர் உலகம்', 'முத்தமிழ் மலர்', 'தியாகி', 'சக்தி', 'நவயுவன்', 'தென்றல்', 'திராவிடநாடு' உள்ளிட்ட பல இதழ்களில் கவிதைகள் எழுதினார். சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை எனப் பல்வேறு நூல்களை எழுதினார்.

குயிலன் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். மனைவி சீதாலக்ஷ்மியுடன் இணைந்து 'சீதாலக்ஷ்மி குயிலன்' என்ற பெயரில் பல படைப்புகளை எழுதினார்.

மொழிபெயர்ப்பு

குயிலன், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு, வடமொழியிலிருந்து தமிழுக்கு எனப் பல நூல்களை மொழிபெயர்த்தார். வடமொழி நூலான விவேக சூடாமணியைத்

கட்டுரை

மொழிபெயர்ப்பு

குயிலன், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு, வடமொழியிலிருந்து தமிழுக்கு எனப் பல நூல்களை மொழிபெயர்த்தார். வடமொழி நூலான விவேக சூடாமணியைத் தமிழில் கவிதை நடையில் தந்தார். குயிலனின் மொழிபெயர்ப்பில் வெளியான எமிலி ஜோலோவின் 'தெரசா' குறிப்பிடத்தகுந்த மொழிபெயர்ப்பு நூலாக அறியப்படுகிறது. தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளிலும் குயிலனின் படைப்புகள் வெளியாகின.

இதழியல்

குயிலன், 'முன்னணி', 'வாரம்' ஆகிய இதழ்களின் ஆசிரியராகச் செயல்பட்டார். தமிழ்ப் பண்ணை சார்பில் சின்ன அண்ணாமலை வெளியிட்ட 'மாலதி' இதழில் ஆசிரியராகப் பணியாற்றினார். 'இலக்கிய மன்றம்' இதழின் பொறுப்பாசிரியராகச் செயல்பட்டார். பொதுவுடைமை சார்ந்து வெளிவந்த 'தென்றல்' இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். 'நூலகம்' இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

பதிப்பு

குயிலன், 1961-ல், 'குயிலன் பதிப்பகம்' என்ற பதிப்பு நிறுவனத்தைத் தொடங்கிப் பல நூல்களை வெளியிட்டார். பல எழுத்தாளர்களை ஊக்குவித்தார்.

அமைப்புச் செயல்பாடுகள்

குயிலன், பல்வேறு இலக்கிய அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு இலக்கியப் பணிகளில் ஈடுபட்டார். தமிழ்ஒளி, முகவை ராஜமாணிக்கம் ஆகியோருடன் இணைந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கினார்.

அரசியல்

குயிலன், காங்கிரஸ் இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அதில் இணைந்து

கட்டுரை

அரசியல்

குயிலன், காங்கிரஸ் இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அதில் இணைந்து பணியாற்றினார். பின் பொதுவுடைமைச் சித்தாந்தத்தால் கவரப்பட்டு அதில் தன்னை இணைத்துக் கொண்டார். பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டார். பொதுவுடைமைக் கட்சி தடைசெய்யப்பட்ட காலகட்டத்தில், 'முன்னணி' இதழில், 'மஞ்சள் பெட்டியில் மண்ணைப் போடுங்கள்' என்ற தலைப்பில் குயிலன் தலையங்கம் எழுதினார். அதனால் ஆட்சியாளர்களின் கோபத்துக்கு உள்ளாகிக் கைது செய்யப்பட்டார். விசாரணைக் கைதியாக மூன்று மாதங்கள் சிறையில் இருந்தார். பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த கே.பாலதண்டாயுதம், எம்.கல்யாணசுந்தரம், ஐ.மாயாண்டி பாரதி ஆகியோருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்.

திரைப்படம்

குயிலன் தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் வெளியான படங்களின் தமிழ் வடிவத்திற்கு வசன ஆசிரியராகப் பணியாற்றினார். ஏ.எல். நாராயணனால் 'உலகம்' என்ற படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமானார். மொழி மாற்றுப் படங்களுக்குப் பாடல்கள் எழுதிய தஞ்சை ராமையாதாஸ், கம்பதாசன், புரட்சிதாசனுக்குப் பின் அதிகப் படங்களுக்கு வசனம், பாடல்கள் எழுதியவர் குயிலன்.

குயிலன் எழுதிய திரைப்பாடல்களை, திருப்பூர் அகிலா விஜயகுமார் மற்றும் புதுவை ஜெ. அபுபக்கர் ஹனிபா இருவரும் இணைந்து 'கவிஞர் குயிலன் திரை இசைப் பாடல்கள்' என்ற தலைப்பில் தொகுத்தனர். மணிவாசகர் பதிப்பகம், 2015-ல் அதனை நூலாக வெளியிட்டது.

மதிப்பீடு

மரபுக் கவிதையில் தேர்ந்தவராக விளங்கிய குயிலன், தமிழின் குறிப்பிடத்தகுந்த திரைப்பாடல்களைத் தந்த பாடலாசிரியராக அறியப்படுகிறார். குயிலனின் படைப்புகள் பற்றி நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, "குயிலன்

கட்டுரை



மதிப்பீடு

மரபுக் கவிதையில் தேர்ந்தவராக விளங்கிய குயிலன், தமிழின் குறிப்பிடத்தகுந்த திரைப்பாடல்களைத் தந்த பாடலாசிரியராக அறியப்படுகிறார். குயிலனின் படைப்புகள் பற்றி நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, "குயிலன் அவர்களின் கவிகளில் நல்ல சொல்லாட்சியும், கற்பனை ஆர்வமும் நிறைந்திருக்கின்றன" என்று மதிப்பிட்டார். இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவராக குயிலன் மதிப்பிடப்படுகிறார்.

நூல்கள்

- சிறார் நூல்
- கவிதை நூல்
- வழிப்போக்கன் முதலிய கவிதைகள்
- தீபாவளி
- நிலை பெற்ற சிலை (காவியம்)
- புதருக்குள் நடந்தது
- பரிசு
- நாவல்
- புரட்சிப் பெண்
- பிழைக்கும் வழி
- மரணதண்டனை
- ஒலியும் வரியும் மொழியும்
- பாரத நாட்டின் வீரபுத்திரன்
- குருவிக்கூடு
- புதுத்தமிழ் கவிமலர்கள்
- நனவாக வேண்டிய கனவு
- செங்குமுதம் (காவியம்)
- சிறுகதைத் தொகுப்பு
- ஒரு கிராமம் விழித்துக்கொள்கிறது
- பெண்களுக்கு உதவி
- பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
- நாடகம்
- சந்திப்பு
- கட்டுரை நூல்
- மா-சே-துங்

மொழிபெயர்ப்பு

- தெரெசா (பிரெஞ்சு மூலம்: எமிலி ஜோலோ, Theresa)
- அவன் பெற்ற செல்வம் (ஆங்கில மூலம்: The Great Expectations)
- அடிமைப் பெண் (ஆங்கில மூலம்: பி.எஸ்.பெக்சன், The Bond Maid)
- ஒளி பிறந்தது (மூலம்: மலையாளச் சிறு கதைகள்)

கட்டுரை

மொழிபெயர்ப்பு

- தெரெசா (பிரெஞ்சு மூலம்: எமிலி ஜோலோ, Theresa)
- அவன் பெற்ற செல்வம் (ஆங்கில மூலம்: The Great Expectations)
- அடிமைப் பெண் (ஆங்கில மூலம்: பி.எஸ்.பெக்சன், The Bond Maid)
- ஒளி பிறந்தது (மூலம்: மலையாளச் சிறு கதைகள்)
- தபசு (மலையாள மூலம்: பாரப்புரத்து)
- மயில் நமது தேசியப் பறவை (மூலம் ஆசிரியர் டி. பி. குரூப்)

மறைவு

குயிலன், டிசம்பர் 08, 2002-ல் காலமானார்.





தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர்



நாளை நமதே

தோல்விகள் உன்னை வீழ்த்த முயன்றாலும்,
உனது விடாமுயற்சி அந்தத் தோல்விகளையே
உனது படிக்கட்டுகளாக மாற்றட்டும்!

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com